ஸ்ரீராம் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பொட்டனேரி - 636453

காலாண்டுப் பொதுத்தேர்வு மாதிரி வினாத்தாள்

பதிவெண் | | | | | | |

வகுப்பு 10

PART-1-மொழிப்பாடம் - தமிழ்

நேரம்: 2.30 மணி மொத்த மதிப்பெண் : 100

அறிவுரைகள்: 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு : i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

பகுதி – I (மதிப்பெண்கள் - 15)

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15X1=15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. ‘மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்’ என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்ப இருந்தது.

2. ‘விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு’. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை –
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

3. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது’ – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –
அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

4. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

5. முல்லை நிலத்திற்குரிய இறைவன்
அ) திருமால் ஆ) முருகன் இ) இந்திரன் ஈ) கொற்றவை

6. “நாடும் மொழியும் நமதிரு கண்கள்” என்று பாடியவர்
அ) பாரதிதாசன் ஆ) இரா.இளங்குமரனார் இ) பாரதியார் ஈ)கால்டுவெல்

7. ஓரேழுத்தில் சோலை இரண்டெழுத்தில் வனம்
அ) புதுமை ஆ) விண்மீன் இ) காற்று ஈ) காடு

8. குலசேகர ஆழ்வார் ‘வித்துவக்கோட்டம்மா’ என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே –
அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி மரபு வழுவமைதி
இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி

9. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம் ; மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும் ; கசகசத்த உயிரினங்கள்.
அ) காற்றின் பாடல் ஆ) உயிர்ப்பின் ஏக்கம்
இ) மொட்டின் வருகை ஈ) நீரின் சிலிர்ப்பு

10. சொல்லில் மறைந்துள்ள தொகையை கூறுக இன்சொல்
அ) உவமைத்தொகை ஆ) உம்மைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

11. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் _________
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே

12. இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?
அ) பெரிய திருமடல் ஆ) திருப்பாவை
இ) பெருமாள் திருமொழி ஈ) சிறிய திருமடல்

13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) பெரியாழ்வார் ஆ) பேயாழ்வார்
இ) நம்மாழ்வார் ஈ) குலசேகர ஆழ்வார்

14. ‘மாயம்’ என்ற சொல்லின் பொருள்
அ) மறைதல் ஆ) விளையாட்டு இ) கோபம் ஈ) ஏமாற்றம்

15. பாடலில் பயின்று வரும் அடியெதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
அ) வாளால், மாளாத, மீளாத், ஆளா ஆ) மாளாத, மருத்துவன், மாயத்தால்
இ) வாளால், வித்துவக், உனதருளே ஈ) அறுத்துச், அடியேனே

## பகுதி – II (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**
**வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4X2=8**

16. நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் எவர் என வள்ளுவர் வாய்மொழி கூறும் செய்தி யாது ?

**17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க**
அ) தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.
ஆ) பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம்.

18. ‘நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை **மா.சுந்தரராஜன். 9566585860**
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்’ - இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.

19. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக

20. வருங்காலத்தில் தேலையெனக் கருதகினற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

**21.** ‘செயல்’ என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **5X2=10**

22. வினாவின் வகையையும் விடை வகையையும் சுட்டுக.
காமராசர் நகர் எங்கே இருக்கிறது ? “இந்த வழியாகச் செல்லுங்கள்” – என்று விடையளிப்பது.

23. தொடரை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.
அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.
**(கலவைத் தொடராக மாற்றுக)**

24. **கலைச்சொல் எழுதுக.** அ) Thesis ஆ) Biotehonology

25. இருசொற்களைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைக்க **தான் - தாம்**

**26. வண்ணமிட்ட சொல்லுக்கான தொகைநிலைத் தொடர் வகைகளை எழுதுக.**
அனைவருக்கும் **மோர்ப்பானையைத்** திறந்து **மோர்** **கொடுக்கவும்.**

**27. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**
நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

28. “உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்” - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

## பகுதி – III (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும்சுருக்கமாக விடையளிக்கவும். 2X3=6**

29. புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.
திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.
இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.
30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி தொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குக் கற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.

1. சிற்றூர் மக்களின் வாழ்வியல் கூறுகளை எடுத்துக்காட்டுபவை எவை?
2. எவற்றின் எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன?
3. நிகழ்கலைகள் மக்களுக்கு எதைக் கொடுத்து, எதைப் போக்குகின்றன?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 2X3=6**

32. சோலைக்(பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.
33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.
34. அ) ‘விருந்தினனாக’ – எனத்தொடங்கும் காசிக்காண்டம் பாடலை எழுதுக. (அல்லது)
ஆ) ‘வெய்யோனொளி’ – எனத்தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2X3=6**

35. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி எழுதுக.
36. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
37. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி – IV ( மதிப்பெண்கள் - 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5X5=25**

**38.** அ) மானோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. **(அல்லது)**
ஆ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.
அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி… தண்டலை மயில்கள் ஆட….
இவ்வுரையைத் தொடர்க!

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.**(அல்லது)**
ஆ) மாநில அளவில் நடைபெற்ற “மரம் இயற்கையின் வரம்” எனும் தலைப்பிலான கட்டுரை போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**40. காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்று எழுதுக.**



41. விழுப்புரம் மாவட்டம், சுப்பையா நகர், சிதம்பரனார் தெருவில் உள்ள 21 – ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் திருவுடையான் மகள் எழிலி, கிளை நூலகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தம்மை எழிலியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள படிவங்களுள் உரிய படிவத்தினை நிரப்புக.

**42.** அ) வீட்டிலும், பள்ளியிலும் நீங்கள் நடந்து கொள்ளும் விதங்கள் ஐந்தினைப் பட்டியலிடுக. **(அல்லது)**

ஆ) மொழிபெயர்க்க

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

## பகுதி – V (மதிப்பெண்கள் - 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க. 3X8=24**

43. அ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள்- அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழைமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக. **(அல்லது)**

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன. **(அல்லது)**

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம். அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை – விண்வெளியில் தமிழரின் அறிவு – கல்பனா சாவ்லா – விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை – முடிவுரை. **(அல்லது)**

ஆ) நீங்கள் படித்த கதை சிறுகதை நூலுக்கான மதிப்புரை எழுதுக. நூலின் தலைப்பு – மையப்பொருள் - மொழிநடை – நூல் வெளிப்படுத்தும் கருத்தும் - நயம் - சிறப்புக்கூறுகள் - நூல் ஆசிரியர்

**மா.சுந்தரராஜன்,**
**முதுகலை தமிழாசிரியர்,**
**9566585860**

Padasalai.Net